தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.71/மா/2022**
**நாள். 21.07.2022**

திருமதி. S. செல்வி,
க/பெ. செல்வராஜ்,
திருச்சிராப்பள்ளி. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
பொன்மலை மண்டலம்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

திருச்சிராப்பள்ளி, இந்தியன் பாங்க் காலனி, கதவு எண்.1/1B என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. S. செல்வி, க/பெ. செல்வராஜ் என்பவரின் 06.06.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.06.2022 அன்று பெறப்பட்டு 71/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருச்சிராப்பள்ளி, இந்தியன் பாங்க் காலனி, கதவு எண் 1/1B என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. S. செல்வி, க/பெ. செல்வராஜ், என்பவர் 29.07.2021 அன்று, தான் ஊழல் தடுப்பு கண்காணிப்புத் துறைக்கு புகார் மனு அனுப்பியிருந்ததாகவும், அத்துறையானது தனது பதிலில், 2014ம் ஆண்டின் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டத்தின்படி, உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அலுவலர்கள் மீதான ஊழல்/நிர்வாக சீர்கேடுகள் குறித்து விசாரிக்க நடுவம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து மனுவில் உள்ள புகார்கள் தொடர்பாக அந்த நடுவத்தை அனுகுமாறு கூறியது. அதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 06.06.2022 நாளிட்ட தனது மனுவில், பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"I am surprised to note that the Corporation bill collector and revenue Inspector without any site inspection and enquiry, clandestinely by playing fraud they have levied a vacant site tax for my property on the name of M.Uma Maheswari w/o. Murali Sundaram but whereas there is no vacant site at all and the entire property in question are all in my name and possession with building and machineries.

This being so, recently it came to my knowledge that a group of persons (land grabbers) under the captainship of one Mr.Murali Sundaram along with his accomplice Mr.S.M.Gajendran & Co. joined together and conspired and fabricated some fraudulent documents with the help of Surveyor, low level Corporation and revenue staff, Sub Registrar etc. manipulated the survey and land records to grab my property

Sir, how can the corporation raise a vacant land tax for a building already in existence and paying the property and water tax to the Corporation for the last 22 years and owned by me? Will it not be ridiculous and absurd.

I am the absolute owner of the property in question situated door No.1/1B, Indian Bank Colony, Trichy-21 and the same is in my possession and enjoyment from 1999 onwards. I have purchased 4908 Sq.ft on land vide sale deed No.709/2005 dt. 24.02.2005. In this site I am having a small industry namely " Aishwarya Steels. The EB service connections, Corporation water connections, Industrial licence, all in my name. I have also availed bank loan by mortgaging this property. I have my building and installed machineries in this site and running my business for the last 22 years.

I am paying all my property tax, water taxes, EB bills regularly and are all in my name and I am the absolute owner of this property and hence no one has any right over this property.

The following documents evidences my constitutional rights over my property:

1. 01.10.1999 Rental Agreement.
2. 20.08.2001: Deputy Inspector of Factories Registration and Licence No.2387/2001
3. 24.02.2005: Doc.709 of 2005 sale deed of my vendor Mrs. Vincent Leela
4. 28.09.2007: Property tax receipt.
5. 29.09.2010: Legal Opinion of Bank Lawyer.
6. 18.08.2017: Document of mortgage of Bank for loan.
7. E.B. bills.
8. Photos of my property with building and boundaries.

I request you to kindly investigate my complaint immediately and not only to cancel the vacant land tax levied by adopting backdoor methods and behind my back but also to take Departmental Proceedings against the staff and to refer the matter to the Anti-corruption and Vigilance for which I shall be thankful and grateful. " என தெரிவித்துள்ளார்.

2) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் 16.06.2022 அன்று நடைபெறவுள்ள விசாரணையில் நேரடியாக ஆஜராகுமாறு இம்முறை மன்ற நடுவத்தின் 09.06.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் அறிவுறுத்தப்பட்டனர்.

3) மனுதாரர் 16.06.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை. தன்னால் அன்றைய விசாரணையில் ஆஜராக இயலாத நிலையை தெரிவித்து பிறிதொரு நாளில்

விசாரணைக்கு தேதி வழங்குமாறு தனது 15.06.2022 நாளிட்ட மின்னஞ்சல் மூலம் கேட்டுக்கொண்டார்.

4) உதவி ஆணையர் மற்றும் நிர்வாக அலுவலர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆகிய இருவரும் 16.06.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:

"மனுதாரர் திருமதி.எஸ். செல்வி என்பவர் தனது புகார் மனுவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொன்மலைத் தோட்டம் கே.கே.நகர் மெயின் ரோடு, க.எண். 1/1B, இந்தியன் பாங்க் காலனி என்கின்ற இடத்திற்கு மாநகராட்சியால் தவறாக காலி மனை வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. அதாவது முரளிசுந்தரம் என்பவரின் மனைவி திருமதி. உமாமகேஸ்வரி என்பவரின் பெயரில் வரி விதிப்பு செய்துள்ளதாக தெரிவித்து, மேற்கண்ட இடம் தனக்கு சொந்தமானது என்பதால், அவ்வரி விதிப்பை இரத்து செய்திட வேண்டி திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் புகார் அளித்திருந்தார். புகார் மனு அளித்த திருமதி. செல்வி என்பவர் அளித்த பத்திரப்பதிவு ஆவணங்கள் மற்றும் முரளி சுந்தரம் என்பவரின் மனைவி திருமதி.உமாமகேஸ்வரி ஆகிய இருவரும் மேற்கண்ட இடம் தொடர்பாக அளித்த பத்திரப்பதிவு ஆவணங்கள் மாநகராட்சி வழக்கறிஞரிடம் கொடுத்து ஆலோசனை பெறப்பட்டதில் மேற்கண்ட இடம் தொடர்பான தாவா நீதிமன்றத்தில் உள்ளதாகத் தெரிவித்து மேற்கண்ட வழக்கின் மீதான தீர்ப்பின் அடிப்படையில் மாநகராட்சியால் மேல்நடவடிக்கை தொடரலாம் என தெரிவித்ததன் அடிப்படையில், தற்போது மேற்கண்ட நிகழ்வில் எவ்வித நடவடிக்கையும் தொடரப்படவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் கடந்த 2019ல் வட்டாட்சியர் அலுவலத்திலிருந்து பெறப்பட்ட Land Survey Extract–ல் மேற்கண்ட இடம் திருமதி. உமாமகேஸ்வரி என்கின்ற பெயர் உள்ளது என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும், இந்நேர்வு தொடர்பாக கடந்த 20 வருடங்களுக்கான E.C. பட்டா, சிட்டா, அடங்கல் மற்றும் மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் Survey Sketch and Extract போன்றவற்றின் நகல்களை இம்முறை மன்றத்தால் அனுமதிக்கப்படும் அடுத்த விசாரணை நாளில் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறோம் என தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையரின் 15.6.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையே எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம். இந்நேர்வில் மனுதாரர் திருமதி.செல்வி மற்றும் திருமதி.உமாமகேஸ்வரி ஆகிய இருவரும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் அளித்துள்ள ஆவணங்களின் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறோம் " என தெரிவித்துள்ளனர்.

5) உதவி ஆணையர், திருச்சிராப்பள்ளி தனது 15.06.2022 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" திருமதி. S.செல்வி வாங்கியுள்ள சொத்தும் திருமதி. உமாமகேஸ்வரியின் சொத்தும் அவரவர் ஆவணத்தில் கீழ்கண்டுள்ளவாறு விவரிக்கப்பட்டுள்ளது.

i) மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தும் இதன் கூடுதல் விஸ்தீர்ணமும் ஆதியில் முனுசாமி நாயுடு என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து ஆகும். லேட். முனுசாமி

நாயுடு எழுதி வைத்த 19.05.1947 தேதிய உயிலின்படி S.M. முத்துக்கிருஷ்ண நாயுடு, S.M.கஜேந்திரன் மற்றும் S.B. தாமோதரன் ஆகியோருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். உயில்படி பாத்தியப்பட்ட சொத்தை இவர்கள் மூவரும் சேர்ந்து மேற்கண்ட சொத்தின் கூடுதல் விஸ்தீரணம் 0.67 செண்ட் நிலத்தை சவுரிராஜன் என்பவருக்கு 07.05.1964 ம் தேதியில் கிரைய ஆவணம் 2049/1964 மூலம் கிரையம் செய்துள்ளனர்.

ii) சவுரிராஜன் இறப்பிற்கு பிறகு அவரது ஒரே வாரிசான ஞானராஜ் என்பவர் அவர் தந்தை கிரையம் பெற்று அனுபவித்து வந்த 0.67 செண்ட் இடத்தை வாரிசு கிரமப்படி அடைந்து அனுபவித்து வந்துள்ளார்.

iii) திரு.V.S.செல்வராஜ் அவர்கள் ஐஸ்வர்யா ஸ்டீல் கார்ப்பரேஷனுக்காக அதன் மேனேஜிங் பார்ட்னர் ஸ்தானத்தில் ஞானராஜ்க்கு சொந்தமான கோ. அபிஷேகபுரம் கிராமம், இந்தியன் வங்கி காலனி, சர்வே எண். 173/1B யில் கட்டுப்பட்ட plot No. 1/113, கிழமேல் ஜாதியடி இருபுறம் 36 தென்வடல் ஜாதியடி இருபுறம் 591/2 ஆகக் கூடுதல் 2140 சதுரடி மனையில் கட்டுப்பட்ட கட்டிடம் மற்றும் அதற்கு முன்னால் உள்ள காலியிடம் ஆகியவற்றை 01.10.1999 முதல் வாடகைக்கு விடப்பட்டு அனுபவித்து வந்துள்ளது, வாடகை உடன்படிக்கையிலிருந்து தெரிய வருகிறது. இந்த ஆவணம் ஒரு பதிவு செய்யப்படாத ஆவணமாக இருந்த போதிலும் ஐஸ்வர்யா ஸ்டீல் கார்ப்பரேஷன் 01.10.1999ல் ஒரு வாடகைதாரியாக அச்சொத்தில் நுழைந்து சுவாதீனத்தில் இருந்து வந்ததன் மூலம் உறுதியாகிறது. மேற்படி ஐஸ்வர்யா ஸ்டீல் கார்ப்பரேஷன் உரிமையாளர் திரு. V.S. செல்வராஜ் மற்றும் செல்வி ஆகியோர் தங்களது தொழிற்சாலை 1 B இந்தியன் காலனி, சிம்கோ மீட்டர் ரோடு, திருச்சி–21ல் செயல்பட்டு வருவதற்கு தொழிற்சாலை சட்டப்படி பெறப்பட்ட உரிமம் காட்டப்பட்டுள்ளது. இதன்படி இந்த உரிமமானது TDL 2387/2001 என்ற எண்ணில் பதிவு செய்யப்பட்டு 2018 வரை புதுப்பிக்கப்பட்டுள்ளது.

iv) மேற்படி ஐஸ்வர்யா ஸ்டீல் கார்ப்பரேஷன் தொழிற்சாலை அமைந்துள்ள இடமும் அதன் கூடுதல் விஸ்தீர்ணமும் ஞானராஜின் தந்தை சவுரிராஜன் அவர்களால் 07.05.1964ம் தேதியில் முத்துக்கிருஷ்ணன் நாயுடு வகையாறவிடம் இருந்து கிரையம் பெற்று அதற்கான கிரைய ஆவணம் 2049/1964 ஆகப் பதிவு செய்யப்பட்டு அனுபவித்து வந்த சொத்தாகும். சவுரிராஜனுக்குப் பிறகு ஞானராஜ் அவர்கள் வாரிசுக்கிரமப்படி அடைந்து அனுபவித்து வந்ததை அவருடைய இறப்பிற்கு பிறகு அவருடைய மனைவி வின்செண்ட் லீலா அவர்கள் ஒரே வாரிசாக இருந்த ஏகதேசமாய் அனுபவித்து வந்ததில் மேலே விவரிக்கப்பட்டுள்ள 4905 சதுரடி உள்ள மனையும் அதில் கட்டப்பட்டுள்ள ஹாலோ பிளாக்குடன் கூடிய ஆஸ்பெட்டாஸ் ஷீட் கூரை, ஒரு மின் இணைப்பு (எண். 494) ஆகியவற்றுடன் ஐஸ்வர்யா ஸ்டீல் கார்ப்பரேஷனின் உரிமையாளராகிய செல்வி அவர்கள் 24.02.2005 அன்று 709/2005 என பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் செய்துள்ளார். அதன் பிறகு இந்தச் சொத்திற்கான வரி செல்வியின் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு செல்வி அனுபவித்து வருகிறார். மேற்படி சொத்தினை கிரையம் பெற்று அச்சொத்திற்கான மின் இணைப்பு மற்றும் தொலைபேசி இணைப்புகள் பெறப்பட்டுள்ளது. செல்வி கிரையம் பெற்றுள்ள

சொத்தின் வரி விதிப்பு அவர் பெயரில் உள்ள கிரைய ஆவணம் அடிப்படையில் வின்சென்ட் லீலா பெயரில் இருந்த வரிவிதிப்பானது செல்வி பெயருக்கு பொன்மலைக் கோட்ட உதவி ஆணையர் 03.11.2005 தேதியிட்ட உத்தரவின் மூலம் பெயர் மாற்றம் செய்து அறிவிப்பு கொடுத்துள்ளார்.

v) மேற்படி செல்வி 2005ல் கிரையம் பெற்ற சொத்தை கரூர் வைசியா வங்கியில் தனது உரிமை ஆவணங்களை வைப்பீடு செய்து கடன் பெற்று அதற்கான கடன் ஆவணங்களாக 7069/2010 தேதி 20.10.2010 மற்றும் 3457/2017 தேதி 18.08.2017 எழுதி பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆவணங்கள் மூலம் திருமதி செல்வி தான் கிரையம் பெற்ற சொத்தில் சட்டப்படியான சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்பது உறுதியாகிறது.

vi) திருமதி. செல்வியின் பெயரில் உள்ள கிரையப் பத்திரத்தில் கண்டுள்ளவாறு அவரின் சுவாதீனத்திலுள்ள அவருடைய சொத்தின் நான்கெல்லைகளை காட்டக்கூடிய புகைப்படங்களை தாக்கல் செய்துள்ளார். அவருடைய இடம் கே. சாத்தனூர் சாலையை ஒட்டி அதன் கீழ்புறத்தில் கிரைய ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளவாறு நிலையிலும் இருப்பது தெரிய வருகிறது.

vii) திருமதி. செல்வி கரூர் வைசியா வங்கியில் அவர் பெற்ற கடனுக்காக வங்கியின் வழக்குரைஞரிடம் ஒரு சட்டக் கருத்துரு பெற்றுள்ளார். அந்த கருத்துருவின்படி சர்வே எண். 173/1 கே. அபிஷேகபுரம் கிராமத்தில் ஏக்கர் 0.67 சென்ட் நிலமானது லேட்.முனுசாமி நாயுடு எழுதி வைத்த 19.05.1947 தேதிய உயிலின்படி S.M.முத்துக்கிருஷ்ண நாயுடு, S.M. கஜேந்திரன் மற்றும் S.B. தாமோதரன் ஆகியோருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். இவர்கள் மூவரும் சேர்ந்து 07.05.1964ல் வின்சென்ட் லீலா அவர்களின் மாமனார் சவுரிராஜனுக்கு கிரையம் செய்துள்ளனர்.

viii) திருமதி. உமாமகேஸ்வரி அவர்கள் மற்றும் அவருடைய கணவர் S.முரளிசுந்தரம் ஆகிய இருவரும் சேர்ந்து S.M.முத்துக்கிருஷ்ணன் அவர்களின் குமாரர் S.M. கஜேந்திரன் மற்றும் S.B.தாமோதரன் அவர்களின் குமாரர் D. உதயசங்கர் ஆகியோரிடம் இருந்து முறையே 6640 /2015 மற்றும் 7371/2015 என்ற எண்ணுள்ள கிரைய ஆவணங்களின் மூலம் கிரையம் பெற்றுள்ளனர். இந்த ஆவணங்களிலும் உமாமகேஸ்வரி மற்றும் முரளிசுந்தரம் கிரையம் பெற்ற சொத்துக்களானது ஆதியில் முனுசாமி நாயுடுக்கு பாத்தியப்பட்டுள்ளது என்றும் முனுசாமி நாயுடு 19.05.1947ல் உயில் எழுதி வைத்துள்ளார் என்றும் மேற்படி உயிலின்படி S.M.முத்துக்கிருஷ்ணன் மற்றும் S.B. தாமோதரன் அவர்களுக்கு மேற்படி சொத்துகள் பாத்தியம் என்றும் R. சவுரிராஜன் அவர்களுக்கு 2049/1964 என்ற எண்ணுள்ள கிரைய ஆவணத்தின் மூலம் S.M. முத்துக்கிருஷ்ணன் அவரின் குமாரர் S.M. கஜேந்திரன் மற்றும் S.B.தாமோதரன் ஆகியோர் சேர்ந்து கிரையம் செய்துள்ளதையும் ஒப்புக் கொண்டுள்ளனர். ஆக செல்வி மற்றும் உமாமகேசுவரி ஆகியோருக்கு கிரையம் செய்தவர்கள் ஒரே மூல ஆவணங்கள் மூலம் தங்களது உரிமை மூலத்தை ஒப்புக் கொள்வது மட்டுமன்றி மூல உரிமையாளர்களையும் ஒப்புக்கொள்கின்றனர்.

ix) ஆனால் திருமதி.உமாமகேஸ்வரியின் கிரைய ஆவணங்களில் சவுரிராஜனுக்கு கிரையம் செய்யப்பட்டது 47 சென்ட் என்று கண்டுள்ளது.

x) செல்விக்கு கிரையம் செய்யப்பட்டுள்ள கிரைய ஆவணத்தில் சவுரிராஜனுக்கு பாத்தியப்பட்ட 67 செண்ட்க்கு நான்கெல்லை விபரம் கொடுக்கப்பட்டு அதில் கட்டுப்பட்ட நான்கு தாக்குகள் கொண்ட 4908 சதுரடி இடத்தினை மட்டும் விற்பனை செய்துள்ளதாக கண்டுள்ளது. மேலும் இந்த 4908 சதுரடிக்கு மேற்கு எல்லையாக இந்தியன் பேங்க் காலனி ரோடும், வடக்கிலும் கிழக்கிலும் விற்பனை செய்பவரின் மீத இடமும் தெற்கில் 10 அடி அகலமுள்ள பாதையும் நான்கெல்லையாக காட்டப்பட்டுள்ளது. மேலும் தற்போதைய உட்பிரிவின்படி செல்வி கிரையம் பெற்றுள்ள இடமானது சர்வே எண். 173/1A1part-ல் கட்டுப்பட்டுள்ளது என்று கிரைய ஆவணத்தில் கண்டுள்ளது. இதிலிருந்து செல்விக்கு கிரையம் பெற்றுள்ள இடம் கிரைய ஆவணத்தில் கண்டுள்ள நான்கெல்லைகளின்படி இடத்தில் அமைந்துள்ளதாக காட்டப்படுகிறது.

xi) திருமதி.உமாமகேஸ்வரியின் கணவர் முரளிசுந்தரம் பொதுவில் பிரிவினையில்லாத பேர் பாதி பங்கினை அவரது மனைவி உமாமகேஸ்வரிக்கு பாத்தியப்படுத்திக் கொடுத்துள்ளார்.

xii) 2015–ல் திருமதி.உமாமகேஸ்வரி கிரையம் பெற்றுள்ள கிரைய ஆவணங்களில் சர்வே எண். 173/1க்கு 173/1A என்ற உட்பிரிவு செய்யப்பட்டு இருந்தது என்று மட்டுமே கண்டுள்ளது மாறாக 2005ல் கிரையம் பெற்றுள்ள செல்வியின் கிரைய ஆவணத்தில் சர்வே எண். 173/1A1 part என்று உட்பிரிவானது குறிப்பிடப்பட்டுள்ளது. 2005லேயே செய்யப்பட்டுள்ள 173/1A1part சர்வே, உட்பிரிவு 2015 கிரைய ஆவணங்களில் வேண்டுமென்றே சொல்லப்படாமல் உள்ளதாகவே தெரிகிறது.

xiii) திருமதி.உமாமகேஸ்வரியின் கிரைய ஆவணங்களில் மாநகராட்சி நில அளவைப்படி புதிய வார்டு AG Block 15 –T.S. No. 13 என்று குறிப்பிட்டுள்ளது. T.S. No. 13க்கான நில உரிமை விபரங்களை ஆய்வு செய்யும்பொழுது T.S.No.13க்கு தொடர்பு உடைய பழைய சர்வே எண்கள் மற்றும் 173/1A2P. 1A1P மற்றும் 1A4P என்று கண்டுள்ளது. அதன்படி முரளிசுந்தரம் மனைவி திருமதி.உமாமகேஸ்வரி பெயரிலுள்ள இடமானது 1 Ares 54.5 Sq. Mr.க்கு 1664 சதுரடி இடம் என்று கண்டுள்ளது, உமாமகேஸ்வரி பெயரில் கிரையம் பெற்றுள்ள ஆவணங்களில் புதிய சர்வே எண். T.S. No. 13 மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது,. அதன்படி 1663 சதுரடிகள் மட்டும் பாத்தியப்பட்ட நிலையில் அவருடைய கணவர் முரளிசுந்தரம் அவருக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் கூடுதலாக T.S. No. 1/3 சேர்க்கப்பட்டுள்ளது. அவர்கள் கிரையம் பெற்றுள்ள 2015ஆம் ஆண்டு கிரைய ஆவணங்களில் T.S. No. 1/3ல் இல்லாமல் இவராக சேர்த்து எழுதிக் கொடுத்துள்ளார்.

xiv) இரு தரப்பினர்களாலும் ஒத்துக் கொள்ளப்பட்ட உயிலின் அடிப்படையில் சவுரிராஜனுக்கு செய்த கிரையம் இரு தரப்பினர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட கிரையம் ஆகும். சவுரிராஜனுக்கு கிரையம் செய்தவர்கள் முனுசாமி நாயுடு உயிலில் கண்டுள்ள முனுசாமி நாயுடுவின் மகன்கள் ஆவர். சவுரிராஜனின் வாரிசுதாரரிடம் இருந்து திருமதி செல்வி கிரையம் பெற்றுள்ளார். அவருடைய கிரைய ஆவணத்தின் படியும் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தானது ரோட்டு ஓரமே

அமைந்துள்ளது. அவர் கிரையம் பெற்ற சொத்துகள் விரிவிதிப்பானது 2005-லேயே பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. செல்விக்கு கிரையம் செய்தவர்களின் உரிமை ஒப்புக்கொள்ளப்பட்டது. மேற்கண்ட கருத்துக்களின் சூழ்நிலையின் சவுரிராஜனின் கிரையதாரரின் வாரிசுகள் 173/1A—வின் உட்பிரிவினை குறிப்பிடாமல் கிரையம் செய்துள்ளார். T.S.No.13க்கும் T.S.No.1/3க்கும் பழைய சர்வே எண் செல்வி கிரையம் பெற்றுள்ள ஆவணத்தில் கண்டுள்ள 173/1A 1part என்பதே ஆகும். 173/1A 1 part என்ற சர்வே எண் திருமதி.உமாமகேஸ்வரியின் ஆவணத்தில் குறிப்பிடாமல் இருப்பது முக்கியத்துவம் வாய்ந்தது. ஆக 173/1A 1 part விஸ்தீரணம் எவ்வளவு என்பதற்கான ஆவணம் ஆய்வுக்கு தாக்கல் செய்யப்படாமல் இருந்தாலும் 173/1A 1 part ஐ பொறுத்து உமாமகேஸ்வரியின் பெயரில் உள்ள ஆவணம் ஒரே இடத்திற்கான 2வது பதிவாகவே கருதப்படுகிறது.

xv) திருமதி.உமாமகேஸ்வரியின் கணவர் தான் எழுதிக்கொடுத்துள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தில் T.S.No. 1/3 சேர்த்து எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் கிரையம் பெற்றுள்ள 2015ஆம் ஆண்டு கிரைய ஆவணங்களில் T.S.No.1/3 இல்லாமல் இவராக சேர்த்து எழுதிக்கொடுத்துள்ளார்.

xvi) திருமதி.உமாமகேஸ்வரி தாக்கல் செய்ததாக தெரிவித்துள்ள வழக்கு O.S.No.231/2021 செல்வி தரப்பினரால் உயர்நீதிமன்றத்தில் CRP(MD) No.1808/2021ல் வழக்கிற்கு தடை உத்தரவு பெறப்பட்டுள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டு வழக்கானது 08.10.2021 அன்று போடப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கில் திருச்சி மாநகராட்சி தரப்பினர் கிடையாது.

xvii) சொத்திற்கு வரி விதிப்பதும் வரிவிதிப்பை ரத்து செய்வதும் மாநகராட்சி ஆணையருக்கு மாநகராட்சி சட்டப்படி கொடுக்கப்பட்ட அதிகாரம் ஆகும். அதன்படி ஒரு வரிவிதிப்பு தவறாக விதிக்கப்பட்டது தெரியவந்தால் அதை ஏன் நீக்கரவு செய்யக்கூடாது என்பதற்கு உரிய எழுத்துப்பூர்வமான அறிவிப்பினை பதிவு தபாலில் அனுப்பி இது தொடர்பாக இரு தரப்பினரையும் அழைத்து விசாரணை செய்து விசாரணையில் முடிவில் உரிய உத்தரவினை பிறப்பிக்க அவருக்கு அதிகாரம் உண்டு. வரிவிதிப்பில் பிரச்சனைக்குரிய இடத்தினை 173/1A1part க்கு சர்வே எண்ணில் விவரங்களோடு நில அளவையரை கொண்டு இடத்தை கள ஆய்வு செய்து அறிக்கை பெற்று முடிவெடுக்கலாம்.

xviii) 2005–லேயே திருமதி.உமாமகேஸ்வரிகத்கு முன்பே, சவுரிராஜனுக்கு பாத்தியப்பட்ட இடத்தினை முறையாக பதிவு செய்துள்ள சட்டப்படி செல்லத் தகுந்த கிரைய ஆவணம் மூலம் திருமதி.செல்வி கிரையம் பெற்றுள்ளதால் அவருடைய பதிவே செல்லத் தகுந்த முதல் பதிவாகும். ஆகவே திருமதி.செல்வி கிரையம் பெற்ற இடத்தினையே திருமதி.உமாமகேஸ்வரி உரிமை கோரும்பட்சத்தில் அவர் ஒரே இடத்திற்கான இரண்டாவது பதிவாகும். ஆகவே திருமதி.உமாமகேஸ்வரி பெயரில் விதிக்கப்பட்ட வரிவிதிப்பினை ரத்து செய்ய உதவி ஆணையரால் பரிசீலனை செய்யப்பட்டது. பின்னாளில் திருமதி.உமாமகேஸ்வரி தாக்கல் செய்துள்ள வழக்கில் ஏற்படும் தீர்ப்பு திருமதி.உமாமகேஸ்வரிக்கு சாதகமாக வரும்பட்சத்தில் அவர்

பெயரில் வரிவிதிப்பு செய்வது குறித்து பின்னர் முடிவெடுக்க பரிசீலனை செய்யப்பட்டது.

இந்நிலையில் திருமதி. M..உமாமகேஸ்வரி, க/பெ. முரளிசுந்தரம் என்பவரிடம் 28.01.2022ந் தேதியன்று விசாரணை நடைபெற்றது. மேற்படி விசாரணையில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

Here I am submitting the documents requested by you for my tax fixation.

i) As per A-Register 1927 the property survey No.173/1A belongs to K-Abishekapuram owner is Alagappa thanicherar.

ii) Alagappa Thanicherar 1937-D No. Nil Auction taken by Munusami Naidu.

iii) As per Document No.3293 year of 1938 Alagappa Thanicherar executed A sale deed in favour of Munusamy Naidu Area of 6 Acres 08 cents in survey No. 173/1 at K-Abishekapuram Village Taluk and District.

iv) In the year of 1947 Munusamy Naidu executed a will No.43/1947 in favour of his son Muthukrishnan grandson Dhamodharan, and his 3 daughters. As per will in this survey No.173/1 Area of 6 Acres 8 cents, apart from 60,000 Sq.ft. for his 3 daughters (each 20,000 sq.ft.) the remaining portion of balance area had been belongs to Muthukrishnan and Dhamodaran.

v) As per Document No.2049/1964 Munusamy Naidu legal heir after his death in the year of 1947, son Muthukrishnan grandson Dhamodaran and also Muthukrishnan son S.M. Gajendran executed the above sale deed in favour of Sowrirajan (Area of 67 cents).

We also got the balance property as per will from the above same person Mr.Gajendran and Dhamodaran's legal heir.

vi) As per our enclosed list sowrirajan's legal heir Gnanaraj and Vincent Leela had been sold the property of 67 cents with their own.

Apart from that Vincent Leela has been sold 11 cents wrongly and also repeated by in their property.

When we purchased the Property, The Property was vacant site. Now it has been encroached.

The Property Tax belongs to Selvi. T.S.No.1/1 and also comes under Residential. But I have Property Tax with Vacant site and also commercial property. After registration I have approached revenue department and I have transferred the Patta is my name. There is no illegal and fake registration in Registration Department.

So. while enquiry of District Registrar he has given the order to settle the dispute in district court Tiruchirapalli.

So we have filed a civil case in OS No. 231/2021 against S.Selvi until the court case Judgment no enquiries will be conducted in this matter in any ground. This is for your kind information.

அதனை தொடர்ந்து திருமதி.உமாமகேஸ்வரி க/பெ. முரளிசுந்தரம் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அதில் 1.10.2021ம் தேதிய மாநகராட்சி வழக்கறிஞர் கருத்துரை பத்தி எண்.17,18, 19ல் குறிப்பிட்டுள்ளவாறு நில அளவையர் கொண்டு கள ஆய்வு செய்து அறிக்கை பெறலாம் எனவும், மேலும் இருவரும் தொடர்ந்த வழக்கில் மாநகராட்சியை வாதியாக சேர்க்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டமையால் நீதிமன்ற முடிவு பெற்று அதன் அடிப்படையில் மேல்நடவடிக்கை தொடரலாம் எனவும் முடிவு செய்யப்பட்டது. இந்நிலையில் திருமதி.உமாமகேஸ்வரி என்பவர் திருமதி.செல்வி என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கின் Affidavit நகல் 15.06.2022ம் தேதி இவ்வலுவலகத்திற்கு விரைவு தபால் மூலம் அனுப்பியுள்ளார். இது தொடர்பாக மாநகராட்சி வழக்கறிஞர் அவர்களின் சட்ட கருத்துரு கோரப்பட்டதில் மேற்கண்ட சர்வே எண்களைப்பொறுத்து சிவில் கோர்ட்டில் O.S.No. 231/2021 என்ற வழக்கு நிலுவையில் உள்ளதாலும் மற்றும் மேல் முறையீட்டிற்காக மதுரை உயர்நீதிமன்றத்தில் C.R.P. நிலுவையில் இருப்பதாலும், நீதிமன்றங்களிலிருந்து எந்தவிதமான தடை உத்தரவோ அல்லது இவர்களுக்கு வழங்கப்பட்ட காலிமனை வரிவிதிப்பை ரத்து செய்யக்கோரி எந்தவிதமான உத்தரவும் இல்லாத சூழ்நிலையில், நீதிமன்றத்திலிருந்து தீர்ப்பு வரும் வரையிலும் எஸ். , செல்வி அவர்களால் கேட்டுக்கொள்ளப்பட்ட இந்த 3 காலிமனை வரிவிதிப்புகளையும் ரத்து செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாமென கருத்துரை வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட பொருள் தொடர்பாக O.S. No. 231/2021 வழக்கு நிலுவையில் உள்ளதால் வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் இருதரப்பினருக்கும் இறுதி முடிவு மேற்கொள்ள பரிசீலனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது என்ற விபரத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) இந்நேர்வில் 23.06.2022 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் மனுதாரர் சார்பாக அவரது கணவர் திரு.எஸ்.செல்வராஜ் என்பவர் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலை கோட்டம், இந்தியன் வங்கி காலனி சர்வே எண்.173/1 A1part பிளாட் எண்.1/1Bயில் 4908 சதுர அடியில் எனது மனைவி திருமதி எஸ்.செல்வி என்பவரின் பெயரில் கட்டடம் உள்ளது. மேற்கண்ட இடத்தில் ஐஸ்வர்யா ஸ்டீல்ஸ் என்கின்ற கம்பெனி எனது மனைவி பெயரில் இயங்கி வருகிறது. மேற்கண்ட கட்டடத்தில் எவ்வித காலியிடமும் இல்லை. ஆனால் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அலுவலர்கள் மேற்கண்ட கட்டடத்திற்கு திருமதி. உமாமகேஸ்வரி என்கின்ற பெயரில் தவறாக காலி மனையிட வரி (VST) விதித்துள்ளனர். மேற்கண்ட திருமதி.உமாமகேஸ்வரி என்பவரின் பெயரில் பதியப்பட்டுள்ள கிரையப்பத்திரத்தில் item No.1ல் தெரிவிக்கப்பட்டுள்ள 4150 சதுர அடியளவு கட்டடம் எங்களது இடமாகும். அதாவது மேற்கண்ட 4908 சதுர அடியில் உள்ளடக்கியதாகும். மேற்கண்ட கட்டடம் எனது மனைவியின் பெயரில் உள்ளதால், அவருக்கு சொந்தமான கட்டடத்திற்கு காலிமனை வரி விதிக்கப்பட்டதை இரத்து செய்திட வேண்டி திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு பல்வேறு மனுக்களை அளித்திருந்தேன். மாநகராட்சி ஆணையரிடமிருந்து பதில் ஏதும் பெறப்படாத நிலையில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையரை நேரில் அணுகி கேட்டபோது தவறுதலாக வரி

விதிப்பு செய்யப்பட்டுள்ளது. அதனை விரைவில் மாற்றி விடுகிறோம் என தெரிவித்தார். அதே போன்று திருச்சிராப்பள்ளி நிர்வாக அலுவலரை தொடர்பு கொண்டபோது இதே பதிலைத்தான் கூறினார். ஆனால் இன்னும் மேற்கண்ட வரி விதிப்பு இரத்து செய்யப்படவில்லை. இது தொடர்பாக வரி வசூலிப்பவரை (Bill Collector) கேட்டபோது அவரும் " ஆமாம். பீரோ கம்பெனி உள்ளது என்பதை தெரிந்துதான் வரி விதிப்பை செய்தேன் மேற்கண்ட வரிவிதிப்பை ரத்து செய்ய முடியாது. உன்னால் என்ன பண்ண முடியுமோ அதை செய்" என சொல்லி அனுப்பி விட்டார்.

மேற்கண்ட கட்டடத்திற்கான 2019 முதல் 2021 ஆண்டு வரையிலான E.C. –ல் எனது மனைவி பெயரே உள்ளது. எனது மனைவி திருமதி. எஸ்.செல்வி அவர்களில் பெயரிலேயே சொத்து வரி (அரையாண்டிற்கு ரூ.2154/–) மற்றும் மின்சாரக்கட்டணம் ஆகியவை எங்களால் செலுத்தப்பட்டு வருகிறது. அதே போன்று மேற்கண்ட கட்டடத்தின்பேரில் வங்கிக்கடனும் பெற்றுள்ளோம். அவை இன்னும் எங்களால் அடைக்கப்படாமல் நிலுவையிலேயே உள்ளது என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மேற்கண்ட கட்டடம் தொடர்பாக வழக்கு எண். O.S. No.231/2021 திருச்சிராப்பள்ளி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்கின்ற விவரத்தையும் இம்முறைமன்றத்தில் பதிவு செய்கிறேன்.

எனது மனைவியின் பெயரில் உள்ள கட்டடத்திற்கு திருமதி உமாமகேஸ்வரி என்கிற பெயரில் விதிக்கப்பட்ட காலிமனை வரியை (VST) ரத்து செய்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும் எனது மனைவி செல்வி என்பவரால் இம்முறைமன்றத்தில் அளிக்கப்பட்டுள்ள 23.06.2022 நாளிட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் நகல்களையும் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். இந்நேர்வு தொடர்பான புகைப்பட நகல்கள் மற்றும் சொத்து வரி செலுத்தியதற்கான ரசீது மற்றும் 2019–2021 ஆண்டிற்கான EC ஆகியவற்றின் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேலும் இந்நாள்வரை (23.06.2022) எடுக்கப்பட்ட EC–ன் நகலையும், தற்போது வரை செலுத்தப்பட்ட சொத்துவரி ரசீதின் நகல்களையும் இன்னும் ஓரிரு நாட்களில் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

மனுதாரர் தனது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளவாறு 23.06.2022 வரை எடுக்கப்பட்ட வில்லங்க சான்றினை சமர்ப்பித்துள்ளார்.

7) திருச்சிராப்பள்ளி மாநகராட்சி நிர்வாக அலுவலர் 23.06.2022 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலை கோட்டம் இந்தியன் வங்கி காலனி 1/1B யில் வசித்து வரும் திருமதி எஸ்.செல்வி என்பவரின் வீட்டிற்கு திருமதி உமாமகேஸ்வரி என்பவரின் பெயரில் காலி மனை வரி திருச்சிராப்பள்ளி மாநகராட்சியால் தவறுதலாகப் போடப்பட்டுள்ளது என தெரிவித்து மாநகராட்சியில் மனு அளித்திருந்ததைத் தொடர்ந்து, மாநகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள், பத்திர ஆவணங்கள், வரைபட நகல், வில்லங்க சான்றிதழ் போன்ற ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டதில் மேற்கண்ட மனுதாரர் தெரிவித்துள்ள இடத்திற்கு திருச்சிராப்பள்ளி மாநகராட்சியால் காலிமனை வரி விதிப்பு ஏதும் செய்யப்படவில்லை என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாநகராட்சி நில அளவையரைக்கொண்டு மேற்கண்ட இடத்தை ஒரு வாரகாலத்திற்குள் அளவீடு செய்து, தவறாக

காலிமனை வரி விதிக்கப்பட்டிருந்தால் அது ரத்து செய்யப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பான மேற்கண்ட ஆவணங்களின் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

8) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி நிர்வாக அலுவலரின் வாக்குமூலம், ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

- மனுதாரர் திருமதி S. செல்வி 1999 முதல் சர்வே எண்.173/1A1 part, பிளாட் எண் 1/1B-ல் இருந்து வருவதாகவும் அந்த இடத்தில் ஐஸ்வர்யா ஸ்டீல்ஸ் என்ற நிறுவனத்தை நடத்தி வந்துள்ளதாகவும் பின்னர் 24.2.2005 அந்த இடத்தை கிரையம் செய்துள்ளதாகவும் தெரிவித்து தனக்கு சொந்தமான இடத்திற்கு மாநகராட்சியால் தவறான பெயரில் காலிமனை வரி விதிப்பு அதாவது முரளிசுந்தரம் என்பவரின் மனைவி திருமதி.உமாமகேஸ்வரி என்பவரின் பெயரில் வரிவிதிப்பு செய்துள்ளதாகவும் தெரிவித்து மேற்கண்ட இடம் தனக்கு சொந்தமானது என்பதால் அவ்வரி விதிப்பை இரத்து செய்திடவும் இதற்கு உடந்தையாக இருந்த மாநகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்திடவும் கோரியுள்ளார்.
- இந்நேர்வில் திரு. செல்வராஜ் அவர்களின் மனைவி திருமதி.S.செல்வி அவர்கள் லேட். S. ஞானராஜ் அவர்களின் மனைவி திருமதி. S. வின்செண்ட் லீலா என்பவரிடமிருந்து சர்வே எண். 173/1A1 partல் உள்ளடக்கிய 4908 சதுர அடி சொத்தை கிரையபத்திர எண்.709/2005 மூலம் 24.02.2005 அன்று கிரையம் பெற்றுள்ளார். மேற்படி சொத்திற்கான வரி விதிப்பு மற்றும் பெயர் மாற்றம் திருமதி. S. வின்செண்ட் லீலா அவர்களின் பெயரிலிருந்து திருமதி. S. செல்விக்கு 3.11.2005ல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அந்த இடத்திற்கான சொத்து வரி மற்றும் தண்ணீர் வரி (Water Tax) ஆகியவற்றை நாளது தேதி வரை அதாவது கடந்த 22 வருடங்களாக திருமதி. S. செல்வி செலுத்தி வருகின்றார். அந்த சொத்திற்கான மின் இணைப்பு மற்றும் தொலைபேசி இணைப்புகளை பெற்று அதன் பயன்பாட்டிற்கான கட்டணத்தையும் தற்பொழுது வரை செலுத்தி வருகிறார் என்பது ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.
- மனுதாரர் திருமதி.S.செல்வி க/பெ. செல்வராஜ் அவர்கள் மேற்கண்ட இடத்தில் ஐஸ்வர்யா ஸ்டீல்ஸ் கார்ப்பரேசன் என்ற தொழிற்சாலையை, தொழிற்சாலைச் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்று இன்று வரை நடத்தி வருகின்றார். மேலும் 2005-ல் கிரையம் பெற்ற சொத்தை திருமதி.S.செல்வி அவர்கள் கரூர் வைசியா வங்கியில் தனது உரிமை ஆவணங்களை வைப்பீடு செய்து கடன் பெற்றுள்ளார். மேற்கண்ட கடன் தீர்க்கப்படும் முன்னரே ஆக்ஸிஸ் வங்கியில் மேற்சொன்ன சொத்தை அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார். தற்பொழுது ஆக்ஸிஸ் வங்கியானது கரூர் வைசியா வங்கியில் திருமதி. S.செல்வி அடமானம் வைத்து வாங்கிய தொகையை தன் பொறுப்பில் எடுத்துக்கொண்டுள்ளது. இந்நிகழ்வில் இருந்து மேற்கண்ட சொத்தின் உரிமையாளர் திருமதி. செல்வி என்பது தெளிவாகின்றது. வங்கி அலுவலர்கள் சொத்தின் உண்மைத்தன்மையை சட்டநிபுனர்களின் கருத்தைப்பெற்று ஆராயாமல் கடன் கொடுத்திருக்க வாய்ப்பில்லை. சர்வே எண். 173/1A1 Part உள்ளடக்கிய 4908 சதுர அடி இடத்திற்கு 23.06.2022 வரை பெறப்பட்ட வில்லங்கச் சான்றிலிருந்தும் மேற்சொன்ன இடம் திருமதி.S.செல்வி அவர்களுக்கு சொந்தமானது என்பது தெளிவாகின்றது.

- 2015–ல் திருமதி.உமாமகேஸ்வரி கிரையம் பெற்றுள்ள கிரைய ஆவணங்களில் சர்வே எண். 173/1க்கு 173/1A என்ற உட்பிரிவு செய்யப்பட்டு இருந்தது என்று மட்டுமே கண்டுள்ளது மாறாக 2005ல் கிரையம் பெற்றுள்ள செல்வியின் கிரைய ஆவணத்தில் சர்வே எண். 173/1A1 part என்று உட்பிரிவானது குறிப்பிடப்பட்டுள்ளது. 2005லேயே செய்யப்பட்டுள்ள 173/1A1part சர்வே உட்பிரிவு 2015 கிரைய ஆவணங்களில் வேண்டுமென்றே சொல்லப்படாமல் உள்ளதாக தெரிகிறது என்பது திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையரது அறிக்கையில் தெளிவாக்கப்பட்டுள்ளது.
- 2005லேயே அதாவது திருமதி. உமாமகேஸ்வரி என்பவர் கிரையம் பெறுவதற்கு முன்பே சவுரிராஜனுக்கு பாத்தியப்பட்ட இடத்தினை சட்டப்படி செல்லத்தகுந்த கிரைய ஆவணம் மூலம் திருமதி.S.செல்வி கிரையம் பெற்றுள்ளதால் அவருடைய பதிவே முதல் பதிவாகும்.
- மேலும், மனுதாரரின் கணவர் தனது வாக்குமூலத்தில் திருமதி.உமாமகேஸ்வரி என்பவரின் பெயரில் பதியப்பட்டுள்ள கிரையப் பத்திரத்தில் item No.1-ல் தெரிவிக்கப்பட்டுள்ள 4150 சதுர அடியளவு கட்டடம் அமைந்துள்ள இடம் எங்களது இடமாகும் எனவும் அதாவது மேற்குறிப்பிட்ட 4908 சதுர அடியில் உள்ளடக்கியதாகும் எனவும் மேற்கண்ட கட்டடம் தனது மனைவியின் பெயரில் உள்ளதால் அவருக்கு சொந்தமான கட்டிடத்திற்கு வேறொருவரின் பெயரில் காலி மனை வரி விதித்ததை ரத்து செய்யுமாறு குறிப்பிட்டுள்ளது தொடர்பாக திருச்சிராப்பள்ளி மாநகராட்சி நிர்வாக அலுவலர் தனது வாக்குமூலத்தில் " மாநகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள், பத்திர ஆவணங்கள், வரைபடநகல், வில்லங்க சான்றிதழ் போன்ற ஆவணங்களை சரிபார்க்கப்பட்டதில் மனுதாரர் திருமதி.செல்வி என்பவர் தெரிவித்துள்ள இடத்திற்கு திருச்சிராப்பள்ளி மாநகராட்சியால் காலிமனை வரிவிதிப்பு ஏதும் செய்யப்படவில்லை எனவும், அவ்வாறு தவறாக காலி மனை வரி விதிக்கப்பட்டிருந்தால் அது இரத்து செய்யப்படும் "என்று தெரிவித்துள்ளார்.

எனவே திருமதி. செல்விக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்173/1A1 part-ல் உள்ளடக்கிய 4908 சதுர அடி இடத்தில் அவருக்கு சொந்தமான ஐஸ்வர்யா ஸ்டீல்ஸ் என்கின்ற கம்பெனி இயங்கி வருவதாலும் மேற்கண்ட இடத்தில் எவ்வித காலியிடமும் இல்லை என்று தெரிவதாலும், மேலும் முழுமையான உரிமையாளரான திருமதி.S.செல்வி உடைமையில் அதாவது கடந்த 22 வருடங்களாக அவரது உடைமையில் மேற்சொன்ன கட்டிடம் உள்ளதாலும் நாளது தேதி வரை சொத்து வரி, மற்றும் தண்ணீர் வரி ஆகியவற்றை செலுத்தி வருவதாலும், மேலும் மனுதாரர் சொத்தின் மீது வங்கிகளில் கடனும் வாங்கியுள்ளதும் தெளிவாகத் தெரிகிறது. காலி மனையே இல்லாத இடத்திற்கு காலி மனை வரி விதிக்கப்பட்டிருந்தால் அது செல்லத்தக்கதல்ல. அவ்வாறு தவறாக வரிவிதிப்பு செய்யப்பட்டிருந்தால் அந்த காலிமனை வரிவிதிப்பை ரத்து செய்திட உரிய நடவடிக்கையை உடனே மேற்கொள்ள திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், இந்நேர்வில் மாநகராட்சி அலுவலர்கள் காலிமனை வரி விதிக்கும் முன்பே அந்த இடத்தை மாநகராட்சி நில அளவையரைக்கொண்டு மாநகராட்சி வருவாய் பிரிவினர் அளவீடு செய்து காலிமனை வரி விதிக்க உகந்ததா என்பதை முடிவு செய்திருக்க வேண்டும். காலிமனை வரி குறித்து முறையான நடைமுறையை இந்நேர்வில் மாநகராட்சியால் பின்பற்றப்படவில்லை என்பதை இச்செயல் எடுத்துக்காட்டியுள்ளது. இந்நிகழ்வு மாநகராட்சி அலுவலர்களின் மெத்தனப்போக்கையும் கடமை தவறிய செயலையும்

காண்பிக்கின்றது. நேரடித்தணிக்கை, கள ஆய்வு (Field Inspection) கள அளவீடு (Survey) விசாரணை போன்றவற்றையும் செய்யாமல் மாநகராட்சி இங்ஙனம் செய்துள்ளது கண்டிக்கத்தக்கது. ஆதலால் இதில் சம்மந்தப்பட்ட அலுவலர்களின் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 21–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி. S.செல்வி,
ஐஸ்வர்யா ஸ்டீல்ஸ்,
1/1B, இந்தியன் பாங்க் காலனி,
திருச்சிராப்பள்ளி – 620 021.

2) ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி.

3) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

26/7/22
செயலாளர்